## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை - விருதுநகர் மாவட்டம்

## வெம்பக்கோட்டை வட்டம்

அறிவிக்கை எண்.01/2025 நாள்:21.07.2025

விளம்பர எண்.01-VBKT

## அறிவிக்கை

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டத்தில் காலியாக உள்ள நான்கு (4) கிராம உதவியாளர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படவுள்ளது. மேற்படி காலிப்பணியிடங்களுக்கு வெம்பக்கோட்டை வட்டத்திற்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் தமிழக அரசின் இணையதளம் (https://www.tn.gov.in), வருவாய் நிருவாகத்துறையின் இணையதளம் (https://cra.tn.gov.in) மற்றும் விருதுநகர் மாவட்ட இணையதளம் (https://virudhunagar.nic.in) மூலம் 21.07.2025 முதல் 19.08.2025 அன்று மாலை 5.45 மணி வரை விண்ணப்பம் செய்யலாம்.

விண்ணப்பதாரர்கள் தமிழை ஒரு பாடமாக கொண்டு 10-ம் வகுப்பு (இடைநிலை இறுதி வகுப்பு சான்றிதழ் (SSLC))இறுதித் தேர்வு எழுதி இருக்க வேண்டும். மேற்படி காலியிடங்கள் கீழ்க்காணுமாறு இனசுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| பிரிவு | பாலினம் | முன்னுரிமை/ முன்னுரிமை அல்லாதது | வயது (அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளன்று) | காலியிடம் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | பொது | முன்னுரிமையற்றவர் | குறைந்தபட்ச வயது -21<br>உச்சவரம்பு வயது -35 | 1(ஒன்று) |
| பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் அல்லாதவர் | பெண் | முன்னுரிமையற்றவர் | குறைந்தபட்ச வயது -21<br>உச்சவரம்பு வயது -35 | 1(ஒன்று) |

| | | | | |
|---|---|---|---|---|
| பொதுப்பிரிவினர் | பெண் | முன்னுரிமை யற்றவர் | குறைந்தபட்ச வயது -21 உச்சவரம்பு வயது -30 | 1(ஒன்று) |
| பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் அல்லாதவர் | பொது | முன்னுரிமை பெற்றவர் | குறைந்தபட்ச வயது -21 உச்சவரம்பு வயது -35 | 1(ஒன்று) |

(*அரசாணை (நிலை) எண்.91 மனிதவள மேலாண்மை (S) துறை நாள்:13.09.2021-ன்படி பணி நியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்சவரம்பு அனைத்துப் பிரிவினருக்கும் அட்டவணையில் கண்டுள்ள வயது வரம்பிலிருந்து இரண்டாண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது.

(**அரசாணை (நிலை) எண்.312 வருவாய் பேரிடர் மேலாண்மை [பணிகள் பிரிவு, பணி8(1)] துறை, நாள்:04.06.2025-ன்படி வாசித்தல் மற்றும் எழுத்து திறன் தேர்வு மற்றும் நேர்காணலுக்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்.)

(***அரசாணை (நிலை) எண் 122, மனித வள மேலாண்மைத் (கே.2) துறை, நாள்:02.11.2021-ன்படி முன்னுரிமை முறை பின்பற்றப்படுகிறது.

குறிப்பு: கிராம உதவியாளர் நேரடி நியமனம் தொடர்பான கூடுதல் விவரங்களை (https://virudhunagar.nic.in) என்ற இணையதள முகவரி மூலமாகவும், வெம்பக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

வருவாய் வட்டாட்சியர்,
வெம்பக்கோட்டை



File No. A-117/27/2024-A8 (Computer No. 628267)
Generated from eOffice by Madhavi, SRI(A8)-ASEC-GEN.REV-COLLR-VNR.DT, SENIOR REVENUE INSPECTOR(A8)_ASEC_GEN.REV_COLLR_VNR.DT, Virudhunagar-VNR-DT.COLLR on 23/07/2025 03:35 pm

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை - விருதுநகர் மாவட்டம்

## வெம்பக்கோட்டை வட்டம்

அறிவிக்கை எண்: 01/2025 நாள் :19.07.2025

### விளம்பர எண். 01-VBKT

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டத்தில் காலியாக உள்ள நான்கு (4) கிராம உதவியாளர் பதவிக்கான காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு 21.07.2025 முதல் 19.08.2025 பிற்பகல் 05.45 வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பதவியின் பெயர் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்றமுறை |
|---|---|---|
| கிராம உதவியாளர் | 04 | ரூ.11,100-35,100/- (சிறப்பு காலமுறை ஊதியம் ஊதியகட்டு எண்.6) |

**1காலிப்பணியிடங்கள் : 04**

| பிரிவு | பாலினம் | முன்னுரிமை/ முன்னுரிமை அல்லாதது | வயது (அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளன்று) | காலியிடம் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | பொது | முன்னுரிமையற்றவர் | குறைந்தபட்ச வயது -21 உச்சவரம்பு வயது -35 | 1(ஒன்று) |
| பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் அல்லாதவர்) | பெண் | முன்னுரிமையற்றவர் | குறைந்தபட்ச வயது -21 உச்சவரம்பு வயது -35 | 1(ஒன்று) |
| பொதுப்பிரிவினர் | பெண் | முன்னுரிமையற்றவர் | குறைந்தபட்ச வயது -21 உச்சவரம்பு வயது -30 | 1(ஒன்று) |
| பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் அல்லாதவர்) | பொது | முன்னுரிமைபெற்றவர் | குறைந்தபட்ச வயது -21 உச்சவரம்பு வயது -35 | 1(ஒன்று) |

- அரசாணை (நிலை) எண் 122, மனித வள மேலாண்மைத் (கே.2) துறை, நாள்:02.11.2021-ன்படி முன்னுரிமை முறை பின்பற்றப்படுகிறது.

**கிராமம் வாரியாக காலிப்பணியிட விவரம் :**

| வ.எண் | கிராமத்தின் பெயர் |
|---|---|
| 1. | தூரார்பட்டி |
| 2. | சேர்வைக்காரன்பட்டி |
| 3. | குகன்பாறை |
| 4. | ஓ.முத்துச்சாமிபுரம் |

**2.முக்கிய தேதிகள் :**

| | | | |
|---|---|---|---|
| அ. | அறிவிக்கை நாள் | : | 21.07.2025 திங்கள் |
| ஆ. | விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | : | 19.08.2025 செவ்வாய் |
| இ. | விண்ணப்பங்கள் பரிசீலனை செய்து முடிவு செய்யப்படும் நாள் | : | 29.08.2025 வெள்ளி |
| ஈ. | வாசித்தல் மற்றும் எழுத்துத்திறன் தேர்வு நடைபெறும் நாள் | : | 19.09.2025 வெள்ளி |
| உ. | நேர்காணல் நடைபெறும் நாள் | : | 03.10.2025 வெள்ளி |
| ஊ. | தெரிவு செய்யப்பட்ட நபர்களின் பட்டியல் வெளியிடப்பட்டு, பணி நியமன ஆணை வழங்கும் நாள் | : | 17.10.2025 வெள்ளி (மாறுதலுக்கு உட்பட்டது இறுதி நேர்காணல் நடைபெறும் நாளிலிருந்து 15 தினங்களுக்குள்) |

**3.தகுதிகள் :**

**(அ) வயது (01.07.2025 அன்று):-**

| வ. எண் | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்தபட்ச வயது (முடிவடைந்து இருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது (முடிவடைந்து இருக்கக் கூடாது) |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் | 21 வயது | 35 வயது |

| | | | |
|---|---|---|---|
| | அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | | |
| 2. | ஏனையோர் (ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகிய வகுப்பினை சாராதவர்கள்) | 21 வயது | 30 வயது |
| குறிப்பு: அரசாணை (நிலை) எண். 91 மனிதவள மேலாண்மை (S) துறை, நாள்: 13.09.2021 ன்படி பணி நியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்சவரம்பு அனைத்துப் பிரிவினருக்கும் அட்டவணையில் கண்டுள்ள வயது வரம்பிலிருந்து இரண்டாண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது. | | | |

<u>வயது வரம்புச் சலுகை :</u>

**(i)** <u>முன்னாள் இராணுவத்தினர் :</u>

ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகிய பிரிவினைச் சேர்ந்தவர்கள் 53 வயது நிறைவடையாமலும், இதர பிரிவினைச் சேர்ந்தவர்கள் 48 வயது நிறைவடையாமலும் இருக்க வேண்டும்.

**(ii)** <u>மாற்றுத்திறனாளிகள் :</u>

நிர்ணயிக்கப்பட்ட வயதிலிருந்து 10 ஆண்டுகள் வரை வயது வரம்புச் சலுகை பெற தகுதியுடையவராவார்கள்.

<u>(ஆ) கல்வித்தகுதி</u>

1. விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்ச கல்வித்தகுதியாக 10 ம் வகுப்பு தேர்வு எழுதி அதற்கான மதிப்பெண் பட்டியல் பெற்றிருக்க வேண்டும்.

2. தமிழை ஒரு பாடமாகக் கொண்டிருக்க வேண்டும்

(இ) இதரத்தகுதிகள்

1. தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்ற பின்னனி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்பி அடையவேண்டும்
2. தேர்வு செய்யப்படுபவர் அந்த வட்டத்தை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
3. தேர்ந்தெருக்க்கூடிய நபரின் கணவரோ மனைவியோ உயிரோடு இருக்கும் போது வேறு ஒரு திருமணம் செய்திருக்க கூடாது.
4. உடற்தகுதிசான்று சமர்பிக்கப்படவேண்டும்.

(ஈ) இருப்பிடத் தகுதி :

விண்ணப்பதாரர்கள் வெம்பக்கோட்டை வட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்க வேண்டும். நிரந்தர முகவரிக்கு ஆதாரமாக வாக்காளர் அடையாள அட்டை/ஆதார் அட்டை/குடும்ப அட்டை/ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும். மனுதாரரின் நிரந்தர முகவரி தொடர்பாக எழும் தெளிவின்மைகள் குறித்து பணி நியமன அலுவலரின் முடிவே இறுதியானது.

4. தெரிவு நடைமுறை

| வ.எண் | தேர்வு முறை | வழங்கப்படும் மதிப்பெண்கள் | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 1. | **கல்வித்தகுதி**<br>தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC-Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (குறிப்பு-(SSLC-Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். | 10 | 10(*) |
| 2. | **மிதிவண்டி/இருசக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன்**<br>அ) இருசக்கர மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பின், (தேர்வு நடத்த தேவையில்லை). | 10 | 10(**) |

| | | | |
|---|---|---|---|
| | (அல்லது)<br>ஆ)மிதிவண்டி அல்லது இருசக்கர மோட்டார் வாகன ஓட்டும் திறன் இருப்பின்(தேர்வு மூலம் கண்டறியப்பட வேண்டும்.)முழு மதிப்பெண் வழங்கப்பட வேண்டும். | | |
| 3. | **வாசித்தல் மற்றும் எழுதும் திறன்**<br>அ) வாசிக்கும் திறனுக்கான தேர்வு(தமிழ்)<br>ஆ) எழுதும் திறனுக்கான தேர்வு(தமிழ்)(நேர்காணல் காணும் குழுவின் முன் வாசித்திட மற்றும் எழுதிட வேண்டும்) | 30 | 30(***) |
| 4. | **வசிப்பிடம்(Native Resident)**<br>**(தற்போதைய முகவரிச்சான்றுடன் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)**<br>அ)சம்பந்தப்பட்ட கிராமத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.<br>ஆ)அருப்புக்கோட்டை தாலுகா எல்லைக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.(நாளது தேதியின்படியான தாலுகா அதிகார வரம்பிற்குட்பட்டு) | 35<br><br>30 | 35 |
| | | | 85 |
| 5. | **நேர்காணல் :**<br>பின்வரும் மூன்று அதிகாரிகளைக் கொண்ட குழுவினால் நேர்காணல் நடத்தப்படும்.<br>அ) வருவாய் கோட்டாட்சியர்<br>ஆ)வட்டாட்சியர்<br>இ)பிற தனி வட்டாட்சியர் viz, தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்)/ நில எடுப்பு (நெடுஞ்சாலை /சிப்காட்) /நிலவரித்திட்டம்.<br>(அ).விண்ணப்பதாரர்கள் நேர்காணலில் கலந்து கொள்வதற்கு முன்பாக அவர்களது தகுதி குறித்த சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட வேண்டும்.<br>(ஆ).நேர்காணலில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வுக்குழுவில் உள்ள தலைவர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்கள் , விண்ணப்பதாரரின் செயல்பாட்டிற்கு ஏற்ப தனித்தனியே | 15 | 15 |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பெண்கள் வழங்க வேண்டும். அதன்படி வழங்கப்பட்ட மதிப்பெண்களின் சராசரி(Average) கணக்கிடப்பட்டு நேர்முகத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களாக எடுத்துக்கொள்ள வேண்டும்.<br>(இ).விண்ணப்பதாரர்களின் ஒட்டுமொத்த செயல்பாட்டிற்கேற்ப வழங்கப்படும் மதிபெண்கள் குறைந்தபட்சம் 6 மதிப்பெண்கள் முதல் அதிகபட்சம் 12 மதிப்பெண்கள் வரை வழங்கப்பட வேண்டும். எக்காரணத்தை கொண்டும் எந்தவொரு விண்ணப்பதாரருக்கும், 12 மதிப்பெண்களுக்கு அதிகமாகவோ அல்லது 6 மதிப்பெண்களுக்கு குறைவாகவோ வழங்கக் கூடாது.<br><br>(ஈ) தகுதிபெற்ற அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும், விடுதலின்றி நேர்காணல் நடத்த வேண்டும். நேர்காணலில் கலந்து கொள்ளாத விண்ணப்பதாரர்களை தெரிவு செய்யக் கூடாது.<br><br>(உ). ஒட்டுமொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் தரவரிசைப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். நேர்காணலில் தேர்வு பெற்றவர்களில் ஒன்றுக்கு மேற்பட்டோர் சமமான மதிப்பெண்களை பெற்று ஒரே தர வரிசையில் இடம்பெறும் நிலையில் சம்மந்தப்பட்ட கிராமத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு முன்னுரிமை அளித்தும் ஒரே தரவரிசையில் இடம்பெறும் நிலையில் வயது அடிப்படையில் மூத்த விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். | | |
| | **மொத்தம்** | | 100 |

குறிப்பு:

ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் ஒரு காலிப் பணியிடத்திற்கு சமமான மதிப்பெண்கள் பெற்றிருந்தால், வயது அடிப்படையில் மூத்த விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவார்.

5.தடையின்மைச் சான்று

அரசுப் பணியாளர்களாக உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது துறையிலிருந்து தடையின்மைச் சான்று பெற்று சான்றிதழ் சரிபார்ப்பின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

6.விண்ணப்பம் செய்தல்:

கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் தமிழக அரசின் இணையதளம் (https://www.tn.gov.in), வருவாய் நிருவாகத்துறையின் இணையதளம் (https://cra.tn.gov.in) மற்றும் விருதுநகர் மாவட்ட இணையதளம் (https://virudhunagar.nic.in) மூலம் 21.07.2025 முதல் 19.08.2025 அன்று மாலை 5.45 மணி வரை விண்ணப்பம் செய்யலாம்.

19/7/25

வருவாய் வட்டாட்சியர்,

வெம்பக்கோட்டை.